## முதன்மை சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்

**27.07.2026**

OS. No. 329/2019

பக்கம் –

PW1 – பாபு

**பிரதிவாதியின் தரப்பில் குறுக்கு விசாரணை**

வாதி அமுதா என் மனைவி. தாவா சொத்து பற்றிய விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். தாவா சொத்து எங்கு உள்ளது என்றால் காஞ்சிபுரம் சின்ன ஐயங்குளம் என்ற கிராமத்தில் 50 வார்டில் உள்ளது. தற்போது தாவா சொத்து என்ன வடிவில் உள்ளது என்றால் காலிமனையாக உள்ளது. தாவா சொத்தின் நீள அகலம் எவ்வளவு என்றால் அது நிலமாக வாங்கப்பட்டது. அதன் சர்வே எண். 76/1 0.09 செண்ட் விஸ்திரனம் ஆகும். தாவா சொத்தை எப்போது கிரையம் பெற்றோம் என்றால் நவம்பர் 2009 வருடம் பழனி என்பவரிடமிருந்து கிரையம் பெற்றோம். தாவா சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் அப்பாவு முதலியார் என்பருக்கு பாத்தியப்பட்டது. அப்பாவு முதலியாரிடமிருந்து தாவா சொத்து யாருக்கு சென்றடைந்தது என்றால் அவருக்கு வாரிசு இல்லாததால் அவருடைய தம்பி மகன் சிவாஜு முதலியாருக்கு உயில் வாயிலாக சென்றடைந்தது. சிவாஜு முதலியார் தாவா சொத்தை என்ன செய்தார் என்றால் எனது Vendor ஆன பழனிக்கு 2007ல் கிரையம் செய்து கொடுத்துள்ளார். ஆனால் தேதி மாதம் எனக்கு ஞயாபகம் இல்லை. சிவாஜு முதலியார் பழனிக்கு கிரையம் செய்து கொடுத்த கிரைய ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் Xerox நகல் தாக்கல் செய்துள்ளேன். சான்றிட்ட நகலோ அல்லது அசலோ நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது பிரமாண வாக்குமூலத்தில் சிவாஜு முதலியார் பழனி என்பவருக்கு 19.12.2007ல் கிரையம் செய்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். என் மனைவி அமுதா பழனியிடமிருந்து 05.11.2009ல் கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். தாவா சொத்து குறித்து சிவாஜு முதலியார் மற்றும் பழனி ஆகியோர் மீது பிரதிவாதி ஆதிரை இந்த நீதிமன்றத்தில் பாக பிரிவினை கோரி அசல் வழக்கு எண் 112/2009 எனும் வழக்கு தாக்கல் செய்துள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தற்போது தெரியும் கிரையம் பெற்றபோது தெரியாது. எப்போது எனக்கு தெரிய வந்தது என்றால் கிரையம்

பெற்ற 3 மாதங்கள் கழித்து அளக்க சென்றபோது தெரியவந்தது. எவ்வாறு தெரிய வந்தது என்றால் அங்கு அளக்க வந்த அதிகாரிகளே என்னிடம் சொன்னார்கள். இருந்தாலும் பரவாயில்லை என்று நான் அளக்க சொன்னேன். அதிகாரிகள் சொன்ன தகவல் சரியா இல்லையா என்று நான் பரிசீலனை செய்தேனா என்றால் செய்தேன். பரிசீலனை செய்ததில் எனக்கு என்ன தெரிய வந்தது என்றால் பாகபிரிவினை வழக்கிற்கும் இந்த வழக்கிற்கும் தாவா சொத்திற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்று தெரிய வந்தது. எப்படி பரிசீலனை செய்தேன் என்றால் சிவாஜு முதலியாரிடம் சென்று பரிசீலனை செய்தேன். அந்த பாகப்பிரிவினை வழக்கில் என்னை ஒரு தரப்பினராக சேர்க்ககோரியுள்ளேனா என்றால் நான் 15வது பிரதிவாதியாக சேர்க்கப்பட்டுள்ளேன். எனக்கு கிரையம் செய்யப்பட்ட தேதிக்கு முன்பாகவே பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்யப்பட்ட விவரம் எனக்கு தெரிய வந்ததா என்றால் நான் பரிசீலித்த பிறகு தெரிந்துகொண்டேன். பாகப்பிரிவினை வழக்கில் நானாகவே தரப்பினராக சேர்ந்துகொண்டேனா அல்லது வாதிதரப்பில் மனு செய்து சேர்க்கப்பட்டேனா என்றால் நானாகவே சேர்ந்துகொண்டேன். நான் கிரையம் பெற்ற 3 மாதத்தில் பாகப்பிரிவினை வழக்கு குறித்து தெரிய வந்தாலும் 2019ஆம் ஆண்டுதான் அந்த வழக்கில் தரப்பினராக சேர்த்துக்கொண்டேன் என்றால் சரிதான். 2019ஆம் ஆண்டுவரை நான் ஏன் அமைதியாக இருந்தேன் என்றால் எனக்கு கிரையம் செய்த பழனி தான் பார்த்துக்கொள்வதாக சொன்னதால் 2019ஆம் ஆண்டுவரை அமைதியாக இருந்தேன். இந்த வழக்கு அசல் வழக்கு எண் 329/2019ம் 2019ஆம் ஆண்டுதான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். 9 ஆண்டுகள் காலதாமதமாக இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளதற்கு நான்தான் பொறுப்பாவேன் என்றால் சரிதான். குறித்த நேரத்தில் இந்த வழக்கு தாக்கல் செய்திருக்க வேண்டும் என்றும் காலதாமதமாக தாக்கல் செய்துள்ளதால் காலதோசத்தின் அடிப்படையில் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. பாகப்பிரிவினை வழக்கு நிலுவையில் இருக்கும்போது தாவா சொத்து கிரையம் பெற்றுள்ளதால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. தாவா சொத்து தற்போது என் கைவசம் உள்ளதா என்றால் தாவா சொத்து இரண்டு Item–ாக உள்ளது. ஒன்று 76/1 மற்றொன்று 79/9பி மொத்தம் 0.14 செண்ட் ஆகும். 76/1ல் ஸ்ரீவித்யா என்பவருக்கு 3.1/2செண்டும்,

என்.கணேஷ்குமார் என்பவருக்கு 5.1/2 செண்டும் 2022ல் விற்றுள்ளேன். ஆக Item No.1 76/1ல் உள்ள 0.09செண்டையும் கிரையம் செய்துள்ளேன் என்றால் சரிதான். ஆக Item No.2ல் 0.05 செண்ட் என் கைவசம் உள்ளது என்றால் சரிதான். ஸ்ரீவித்யா மற்றும் கணேஷ்குமாருக்கு கிரையம் செய்து கொடுத்தபோது அசல் வழக்கு 329/2019 வழக்கு நிலுையில் இருக்கும் விவரத்தை சொல்லி விற்றேனா என்றால் சொல்லிதான் விற்றேன். ஸ்ரீவித்யா மற்றும் கணேஷ்குமாரை இந்த வழக்கில் தரப்பினராக சேர்த்துள்ளேனா என்றால் சேர்க்கவில்லை. நான் வாங்கியதும் செல்லாது கிரையம் விற்றதும் செல்லாது என்றால் சரியல்ல. இந்த வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

Sd/– J.மோகனா,
முதன்மை சார்பு நீதிபதி,
காஞ்சிபுரம்.